DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.13/2025**
**P.W.2**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.முத்துகுமார் |
| Father's Name | : | திரு.சுப்ரமணி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 36 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of June 2025.

**முதல் விசாரணை**

நான் கரூர் மாவட்டம், சுரக்காபட்டியில் வசிக்கிறேன். நான் உசிலை ஊரணியில் உள்ள பேக்கரி கடையில் வேலை பார்க்கிறேன். அ.சா.1 தமிழ்செல்வனை தெரியும். எதிரியை தெரியும். மார்க்கண்டேயன் என்பவரை தெரியும். கடந்த 01.11.2024 அன்று இரவு சுமார் 9.30 மணியளவில் நான் பேக்கரிகடையில் இருந்த போது குமார் சலூன் கடை அருகே நின்று கொண்டிருந்த மார்க்கண்டேயன் நின்று கொண்டிருந்தான். அப்போது எதிரி பழனிவேல் மார்க்கண்டேயனிடம் ஏன் இங்கு வந்து நின்றுகொண்டிருக்கிறாய் என்று கேட்டார். அவ்வாறு கேட்டு கொண்டு இருக்கும் போது இருவரும் அடித்து கொண்டார்கள். அப்போது மார்க்கண்டேயன் அவரது நண்பரான அ.சா.1 தமிழ்செல்வனுக்கு, போன் பண்ணி வரச்சொன்னார். உடனே அ.சா.1 தமிழ்செல்வனும், அங்கு அவரது இரு சக்கர வாகனத்தில் வந்தார். அ.சா.1 தமிழ்செல்வன் எதிரியிடம் ஏன்

Web Copy

மார்க்கண்டேயனிடம் சண்டைபோட்டாய் என்று கேட்டார். அதற்கு எதிரி அ.சா.1 தமிழ்செல்வனை பார்த்து புண்டா மகனே என்று திட்டினார். எதிரி தன் கையில் வைத்திருந்த கத்தியை வைத்து கொண்டு அ.சா.1 தமிழ்செல்வனின் முதுகு,கழுத்தில் மற்றும் வலது,இடது தோள்பட்டையில் குத்திவிட்டான். மேலும் இருசக்கர வாகனத்தின் சாவியை வைத்து அ.சா.1 தமிழ்செல்வனின் நெஞ்சில் குத்திவிட்டான். எதிரி அ.சா.1 தமிழ்செல்வனை பார்த்து கத்தியை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு சென்றான். அதனால் அ.சா.1 தமிழ்செல்வன் மயக்கம் போட்டு கிழே விழுந்துவிட்டான். காயம் பட்ட தமிழ்செல்வனை அந்த வழியாக வந்த ஒரு வாகனத்தில் ஏற்றி மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தோம். என்னிடம் காட்டப்படும் அரசு சான்று பொருள் 1 ஆகிய கத்திதான் அ.சா.1 தமிழ்செல்வனை குத்துவதற்கு எதிரி பயன்படுத்துவது ஆகும்.

குறுக்கு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adobe